Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# Executive Officer

## Previous Year Paper
### Grade 4 (21 Feb 2019)
### GENERAL TAMIL

Teachingninja.in

Sl. No. :

# EO4GT

பதிவு எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|

## 2019

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL



Teachingninja.in

SPACE FOR ROUGH WORK



Teachingninja.in

1. குன்றக்குடி அடிகளாரால் 'கவியரசு' என்னும் பட்டம் பெற்றவர்

(A) ந. பிச்சமூர்த்தி

(B) கவிஞர் சுரதா

(C) பாரதிதாசன்

(D) முடியரசன்

2. 'குறுகினன்' –சரியாகப் பிரித்தெழுதுக.

(A) குறு + இன் + அன்

(B) குறுகி + இன் + அன்

(C) குறுகு + இன் + அன்

(D) குறுக்கி + இன் + அன்

3. ஒப்புரவு – எதிர்ச்சொல் – தருக

(A) மறவாமை

(B) உதவாமை

(C) நாடாமை

(D) இல்லாமை

4. உவம உருபு பயின்று வராத தொடரைத் தேர்வு செய்க

(A) முழவு உறழ் தடக்கை

(B) தாய் போல் பேசும் மகள்

(C) மான் மருளும்

(D) வேய்புரை தோள்



Teachingninja.in

5. தவறான வினைமரபுத் தொடரைத் தேர்க

(A) தண்ணீர் குடித்தான்

(B) உமி கருக்கினான்

(C) முறுக்குத் தின்றான்

(D) பால் குடித்தான்

6. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்க

(A) உணவு, உடை, அடிப்படை தேவை – அந்த தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்

(B) உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்த தேவையை பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்கு தரப்பட வேண்டும்

(C) உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்

(D) உணவு, உடை, அடிப்படை தேவை – அந்தத் தேவையை பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்

7. Writs என்ற சொல்லின் பொருள்

(A) சட்ட நுணுக்கங்கள்

(B) சட்ட செயல்கள்

(C) சட்ட ஆவணங்கள்

(D) சட்ட சிக்கல்கள்

8. பொருள் கூறு – தண்

(A) தண்ணீர்

(B) குளிர்ச்சி

(C) சோலை

(D) தன்னுடைய



Teachingninja.in

9. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?

(A) எடுத்துக்காட்டு உவமையணி

(B) உவமையணி

(C) பிறிது மொழிதலணி

(D) பொருள் பின்வருநிலையணி

10. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக

(A) சார்பு, சிறுகதை, சூடாமணி, செவ்வாழை, சோளம்

(B) செவ்வாழை, சோளம், சிறுகதை, சார்பு, சூடாமணி

(C) சிறுகதை, சூடாமணி, சிறுகதை, சோளம், சார்பு

(D) சிறுகதை, சார்பு, சோளம், செவ்வாழை, சூடாமணி

11. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

(A) அரியவற்றுள் அரிதே, பெரியாரை எல்லாம்

(B) அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரை

(C) அரியவற்றுள் எல்லாம், பெரியாரை அரிதே

(D) பெரியாரை எல்லாம், அரியவற்றுள் அரிதே

Teachingninja.in



Teachingninja.in

12. “கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்” என்பது

(A) நேர்மறைத்தொடர்

(B) எதிர்மறைத்தொடர்

(C) பொருள் மாறா எதிர்மறைத்தொடர்

(D) பொருள் மாறும் எதிர்மறைத்தொடர்

13. முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?

(A) ஏகதேச உருவக அணி

(B) உவமையணி

(C) எடுத்துக்காட்டு உவமையணி

(D) பிறிதுமொழிதல் அணி

14. கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை வகை எது?
அளவில்சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்

(A) எதுகை தொடை

(B) இயைபு தொடை

(C) முரண் தொடை

(D) மோனை தொடை

15. ஓர் அடியில் உள்ள நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது

(A) இணை மோனை

(B) கூழை மோனை

(C) பொழிப்பு மோனை

(D) முற்று மோனை



Teachingninja.in

16. ‘திரை கடலோடியும் திரவியம் தேடு’ என்றவர்

(A) தொல்காப்பியர்

(B) பவணந்தி முனிவர்

(C) ஔவையார்

(D) இளங்கோவடிகள்

17. “சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே” என்றவர்

(A) பரணர்

(B) பொய்யில் புலவர்

(C) செம்புலப்பெயல் நீரார்

(D) ஔவையார்

18. நூல்கள், நூலாசிரியர்கள் – பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தொன்னூல் விளக்கம் | 1. | புகழேந்தி |
| (b) | மனுமுறை கண்ட வாசகம் | 2. | மாணிக்கவாசகர் |
| (c) | நளவெண்பா | 3. | இராமலிங்க அடிகளார் |
| (d) | திருக்கோவையார் | 4. | வீரமாமுனிவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

19. நாறுவ என்னும் சொல் தரும் பொருள்

(A) மூத்த

(B) முளைப்ப

(C) நறுமணம்

(D) கெடாமல்



Teachingninja.in

20. ‘புலனழுக்கற்ற அந்தணாளன்’ – என்று புகழப்படும் சங்கப்புலவர்

(A) பரணர்
(B) கபிலர்
(C) நக்கண்ணையார்
(D) ஔவையார்

21. “நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்தும் மேம்படத் தக்கோன்” – என்ற வரிகள் இடம்பெற்ற நூல் எது?

(A) மலைபடுகடாம்
(B) மதுரைக்காஞ்சி
(C) முல்லைப்பாட்டு
(D) பட்டினப்பாலை

22. சீத்தலை சாத்தனாருக்கு தொடர்பில்லாத தொடரைக் கண்டறிக

(A) கூல வாணிகம் செய்தவர்
(B) மதுரையில் வாழ்ந்தவர்
(C) முதற்சங்கப் புலவர்களில் ஒருவர்
(D) இளங்கோவடிகளின் உற்ற நண்பர்

23. “நாடகமேத்தும் நாடகக் கணிகை” என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) கண்ணகி
(B) மணிமேகலை
(C) மாதவி
(D) ஆதிரை

24. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருநாவுக்கரசர் பாடியது

(A) நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள்
(B) ஐந்து, ஆறு, ஏழு திருமுறைகள்
(C) முதல் ஆறு திருமுறைகள்
(D) ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகள்



Teachingninja.in

25. "நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடை நந்தி" – இத்தொடரில் 'நந்தி' என்ற சொல் குறிப்பிடும் சான்றோர் யார்?

(A) நந்தீஸ்வரன்
(B) நந்திவர்மன்
(C) நந்திதெய்வம்
(D) நந்தியின் பக்தன்

26. பொருத்துக.

(a) அடவி — 1. பெண்யானை
(b) வனப்பு — 2. வலிமை
(c) பிடி — 3. காடு
(d) வீறு — 4. அழகு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

27. தவறான தொடரைச் சுட்டுக.

(A) 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது மனோன்மணீயம்
(B) காப்பிய இலக்கணம் முழுதும் நிரம்பியது மனோன்மணீயம்
(C) மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வீர உணர்வையும் ஊட்டுவதாகத் திகழ்வது மனோன்மணீயம்
(D) இயற்கையில் ஈடுபாடு கொண்டு அதனில் இன்பம் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதைக் கூறுவது மனோன்மணீயம்

28. சொற்பொருள் பொருத்துக :

(a) பிரசம் — 1. வறுமை
(b) வறன் — 2. தேன்
(c) மதுகை — 3. பெருஞ்செல்வம்
(d) கொழுஞ்சோறு — 4. பெருமிதம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

29. சித்தர் பாடல்கள் என்றதும் முதலில் நம் நினைவுக்கு வருவது?

(A) பக்தி உணர்வு
(B) ஒற்றுமை உணர்வு
(C) இயற்கை உணர்வு
(D) சமூக உணர்வு


Teachingninja.in

30. "நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்" — என்ற வரிகளில்
"ஒற்றைக்கால் நெடிய பந்தல்" எனக் குறிக்கப்பெறுவது எது?

(A) மூங்கில் மரம்
(B) தேக்கு மரம்
(C) ஆல மரம்
(D) அரச மரம்

31. நூல்கள் – நூலாசிரியர்கள் – பொருத்துக.

(a) அழகின் சிரிப்பு — 1. நாமக்கல் கவிஞர்
(b) தெய்வத் திருமலர் — 2. பாரதியார்
(c) பாவியக் கொத்து — 3. பாரதிதாசன்
(d) கண்ணன் பாட்டு — 4. பாவலரேறு பெருஞ்சித்திரனார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

32. பாரதியார் இயற்றிய ஞானரதம் என்னும் நூல் ———— வகையைச் சார்ந்தது.

(A) சமய இலக்கியம்
(B) கவிதை இலக்கியம்
(C) உரைநடை இலக்கியம்
(D) நாடக இலக்கியம்

33. கீழ்க்கண்ட கூற்றுக்களைப் படித்து சரியானவற்றைத் தேர்வு செய்க.

1. உவமைக்கவிஞர் சுரதாவின் இயற்பெயர் தி. இராசகோபாலன்
2. இவர் பழையனூரில் பிறந்தார்
3. துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், முதலிய சிறுகதை நூல்களை இயற்றியுள்ளார்
4. தேன்மழை என்னும் கவிதைநூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது

(A) 1, 4 ஆம் கூற்றுக்கள் சரியானது
(B) 1, 3, 4 ஆம் கூற்றுக்கள் சரியானது
(C) 1, 2, 4 ஆம் கூற்றுக்கள் சரியானது
(D) அனைத்து கூற்றுக்களும் சரியானது



Teachingninja.in

34. "இமயம் எங்கள் காலடியில்" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் யாருடையது?

(A) சாலினி இளந்திரையன்

(B) ஞானக் கூத்தன்

(C) ஆலந்தூர் மோகனரங்கன்

(D) சாலை இளந்திரையன்

35. "உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி" என்று கூறியவர் யார்?

(A) கவியரசன்

(B) சுரதா

(C) ந. பிச்சமூர்த்தி

(D) முடியரசன்

36. 'பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்' என்று அறிஞர் அண்ணா யாருக்குக் கடிதம் எழுதினார்?

(A) தங்கைக்கு

(B) தம்பிக்கு

(C) மக்களுக்கு

(D) உறவினருக்கு

37. 'தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் சிந்தை, சொல், செயல்களையே போற்று' – இது யாருடைய கூற்று

(A) பெரியார்

(B) காந்தியடிகள்

(C) மு. வரதராசன்

(D) அறிஞர் அண்ணா



Teachingninja.in

38. பல்லவர் காலச் சிற்பிகள் எவ்வகை உருவங்களை செதுக்குவதில் கைதேர்ந்திருந்தனர்

(A) குதிரை

(B) யானை

(C) கடவுள்

(D) மனிதன்

39. பொருத்தமான விடை தேர்ந்தெடு :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிறு பஞ்சமூலம் | 1. | காப்பிய இலக்கியம் |
| (b) | குடும்ப விளக்கு | 2. | சங்க இலக்கியம் |
| (c) | சீவக சிந்தாமணி | 3. | அற இலக்கியம் |
| (d) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

40. திராவிட என்னும் சொல் தமிழில் உருவான விதத்தை தேர்வு செய்க.

(A) தமிழ் > திரவிட > திராவிட > திரமிள

(B) தமிழ் > திரமிள > திரவிட > திராவிட

(C) திரவிட > தமிழ் > திரமிள > திராவிட

(D) திரமிள > திராவிட > தமிழ் > திரவிட

41. 'என்றுமுள தென்தமிழ்' எனக் குறிப்பிட்டவர் யார்?

(A) மாக்ஸ் முல்லர்

(B) கபிலர்

(C) கம்பர்

(D) காளமேகப்புலவர்



Teachingninja.in

42. முதன் முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர் யார்?

(A) குணங்குடி மஸ்தான் சாகிபு

(B) ஆறுமுக நாவலர்

(C) வீரமாமுனிவர்

(D) ரா.பி. சேதுப்பிள்ளை

43. ஜி.யு. போப் கி.பி. 1820 ஆம் ஆண்டு —————— ஆம் நாள் பிறந்தார்

(A) ஏப்ரல் 24

(B) நவம்பர் 17

(C) பிப்ரவரி 18

(D) ஆகஸ்ட் 23

44. “பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது” – என உறுதியாக எடுத்துரைத்தவர் யார்?

(A) அறிஞர் அண்ணா

(B) பெரியார்

(C) அம்பேத்கர்

(D) காமராசர்



Teachingninja.in

45. பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள் ———— எனவும், சிற்றூர்கள் ———— எனவும் பெயர் பெற்றன.

(A) கீழூர், மேலூர் (B) தென் பழஞ்சி, வட பழஞ்சி

(C) பட்டினம், பாக்கம் (D) பட்டி, பாளையம்

46. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி" – இவ்வரிகள் இடம்பெற்ற நூல்

(A) புறப்பொருள் வெண்பாமாலை (B) புறநானூறு

(C) தொல்காப்பியம் (D) எதுவுமில்லை

47. பொருத்துக:

(a) அறிவு அற்றம் காக்கும் கருவி — 1. பெருங்கதை

(b) அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் — 2. ஔவையார்

(c) தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த — 3. திருக்குறள்

(d) அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி — 4. பதிற்றுப்பத்து

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

48. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்

(A) மூவலூர் இராமாமிர்தம் (B) பண்டித ரமாபாய்

(C) சாவித்திரிபாய் பூலே (D) நீலாம்பிகை அம்மையார்

49. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவர்

(A) பண்டித ரமாபாய்

(B) மூவலூர் இராமாமிர்தம்

(C) சாவித்திரிபாய் பூலே

(D) டாக்டர் முத்துலெட்சுமி



Teachingninja.in

50. தொடி, இச்சொல்லின் பொருள்

(A) வயல்

(B) நெல்

(C) வளையல்

(D) உலக்கை

51. முல்லை நிலத்தில் நடைபெறும் தொழில்

(A) தேனெடுத்தல்

(B) ஏறுதழுவுதல்

(C) நெல்லரித்தல்

(D) மீன்பிடித்தல்

52. ஆசிரியப்பாவின் வகைகளில் இல்லாத ஒன்று எது?

(A) நேரிசை ஆசிரியப்பா

(B) நிரையிசை ஆசிரியப்பா

(C) நிலை மண்டில ஆசிரியப்பா

(D) அடிமறி மண்டில ஆசிரியப்பா



Teachingninja.in
Teachingninja.in

53. பிழையற்றத் தொடரை எழுதுக.

(A) அவன் கவிஞன் அல்ல

(B) அவன் கவிஞன் அன்று

(C) அவன் கவிஞன் அல்லன்

(D) அவன் கவிஞன் அல்லர்

54. பின்வரும் தொடர்களில் சரியான விடையினை எடுத்து எழுது.

என் மாமா வந்தது

(A) திணை வழு

(B) மரபு வழு

(C) கால வழு

(D) இட வழு

55. சந்திப் பிழையற்ற தொடரைக் கண்டறிக

(A) தமிழில் வரலாற்று கருத்துக்களையும் பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

(B) தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்

(C) தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்

(D) தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும் பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

56. ஒருமைப் பன்மை பிழையற்ற தொடரைத் தேர்க

(A) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழிகளாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது

(B) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது

(C) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழிகளாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளன

(D) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளன



Teachingninja.in

57. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தா | 1. | சோலை |
| (b) | கா | 2. | அம்பு |
| (c) | வே | 3. | தாவுதல் |
| (d) | ஏ | 4. | மறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

58. 'தேசியம் காத்த செம்மல்' எனத் திரு.வி.க. யாரைப் பாராட்டியுள்ளார்?

(A) முத்துராமலிங்கர்
(B) முத்து கிருஷ்ணன்
(C) முத்தையா
(D) முருகதாசர்

59. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கற்றல் | 1. | அடக்கு |
| (b) | பெற்ற | 2. | கல் |
| (c) | அடக்கி | 3. | கேள் |
| (d) | கேட்டவன் | 4. | பெறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

60. கோ – என்னும் வேர்ச்சொல்லில் உருவான சரியான தொடர் எது?

(A) கோத்தல், கோட்டை, கோப்பு
(B) கோத்தல், கோவை, கோப்பு
(C) கோத்தல், கோலம், கோப்பு
(D) கோத்தல், கோணல், கோப்பு

Teachingninja.in

61. ஆதிரையான் – எவ்வகைப் பெயர் பகுபதம்?

(A) தொழிற்பெயர் பகுபதம்

(B) இடப்பெயர் பகுபதம்

(C) காலப்பெயர் பகுபதம்

(D) பொருட்பெயர் பகுபதம்

62. 'தழீஇய' என்பது —————— அளபெடை

(A) இன்னிசை

(B) செய்யுளிசை

(C) சொல்லிசை

(D) ஒற்று

63. விடைக்கேற்ற வினா அமைக்க

மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை

(A) யாருடைய புகழ் மங்காது விளங்கும் என்பதில் ஐயமில்லை?

(B) யாருடைய பெயர் மங்காது விளங்கும் என்பதில் ஐயமில்லை?

(C) யாருடைய பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை?

(D) யாருடைய பெயர் புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை?

Teachingninja.in



Teachingninja.in

64. யாழினி திருக்குறள் கற்றாள் – எவ்வகைத் தொடர்?

(A) தன்வினைத் தொடர்

(B) பிறவினைத் தொடர்

(C) செய்வினைத் தொடர்

(D) எதிர்வினைத் தொடர்

65. உரிய விடையை தேர்வு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | தடக்கரி | 1. | புலி |
| (b) | உழுவை | 2. | சிங்கம் |
| (c) | மடங்கல் | 3. | பன்றி |
| (d) | கேழல் | 4. | பெரிய யானை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

66. இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் ——————.
பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு.

(A) படை

(B) பொழுது

(C) செல்வம்

(D) பகை

67. திருக்குறளில் ‘உடைமை’ என்னும் பெயரில் திருவள்ளுவர் எழுதாத அதிகாரம் எது?

(A) அன்புடைமை

(B) ஆள்வினையுடைமை

(C) ஒடுக்கமுடைமை

(D) ஒழுக்கமுடைமை

68. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு – இதில் வேளாண்மை என்னும் சொல் தரும் பொருள்

(A) உழவு செய்தல்

(B) பயிர் செய்தல்

(C) விளைவித்தல்

(D) உதவி செய்தல்



Teachingninja.in

69. "அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்" – யார், யாரிடம் கூறியது?

(A) இராமன் இலக்குவனிடம் கூறியது

(B) இராமன் குகனிடம் கூறியது

(C) குகன் இராமனிடம் கூறியது

(D) இலக்குவன் குகனிடம் கூறியது

70. துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை – என்ற பொருள் தரும் வரிகள் அமைந்த நூல்

(A) தேம்பாவணி

(B) கம்பராமாயணம்

(C) சீவகசிந்தாமணி

(D) மணிமேகலை

71. "கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) குறுந்தொகை

(B) நற்றிணை

(C) அகநானூறு

(D) புறநானூறு

72. புறநானூற்றின் கண் உள்ள துறைகள் எத்தனை?

(A) 65

(B) 55

(C) 60

(D) 63



Teachingninja.in

73. "ஆரணியும், சடைமுடியார் அடியார்க்கு நீர் வைத்த" – இத்தொடரில் "ஆறணியும்" எனச் சுட்டப் பெறுபவர் யார்?

(A) முருகன்
(B) சிவன்
(C) திருமால்
(D) வருணன்

74. பெரியபுராணம் என்னும் நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர்

(A) திருத்தொண்டர் புராணம்
(B) திருவிளையாடர் புராணம்
(C) சிவபுராணம்
(D) கந்தபுராணம்

75. 'முத்தொள்ளாயிரம்', இப்பாடலின் ஆசிரியர்

(A) நல்லாடனார்
(B) மிளை கிழான் நல்வேட்டனார்
(C) பெயர் தெரியவில்லை
(D) செயங்கொண்டார்

76. "வையகமெல்லா மெம தென்றெழுதுமே
மொய்யிலை வேல் மாறன் களிறு" –
இப்பாடல் வரி இடம் பெற்ற நூல்

(A) கலிங்கத்துப்பரணி
(B) முத்தொள்ளாயிரம்
(C) பிள்ளைத்தமிழ்
(D) தமிழ்விடுதூது

77. "செங்கீரைப்பருவம்" – பிள்ளைத்தமிழின் எத்தனையாவது பருவம்?

(A) மூன்றாம் பருவம்
(B) நான்காம் பருவம்
(C) இரண்டாம் பருவம்
(D) ஐந்தாம் பருவம்


Teachingninja.in

78. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன." – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) திருமந்திரம்

(B) திருவாசகம்

(C) திருக்கோவையார்

(D) திருவிளையாடற் புராணம்

79. குலசேகராழ்வார் பாடல் ———— தொகுப்பில் உள்ளது.

(A) பெரிய திருமொழி

(B) திருவியற்பா

(C) திருவாய் மொழி

(D) முதலாயிரம்

80. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் மூன்றாம் பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது

(A) ஆண்டாள் அருளியது

(B) குலசேகர ஆழ்வார் அருளியது

(C) பெரியாழ்வார் அருளியது

(D) திருமங்கையாழ்வார் அருளியது

81. கீழ்க்கண்டவற்றுள் நாமக்கல் கவிஞரின் கவிதைத் தொகுப்புகளை மட்டும் தேர்வு செய்க.

(A) திருமலர், இசைமலர், சமுதாய மலர், பல்சுவை மலர்

(B) பாரதகீதம், கவிக்கனவுகள், அருட்செல்வம், புதுயுகப்பாட்டு

(C) தமிழச்சி, கொடிமுல்லை, எழிலோவியம், இன்ப இலக்கியம்

(D) பூத்ததுமானுடம், வீறுகள் ஆயிரம், சிரிப்பின் நிழல், தமிழ்ச்சிட்டு



Teachingninja.in

82. "உரைநடையின் சிக்கனந்தான் கவிதை; ஓங்கும் உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம்" – என்ற கவிதை வரியின் ஆசிரியர் யார்?

(A) அப்துல் ரகுமான்

(B) கல்யாண்ஜி

(C) கவிஞர் சுரதா

(D) கலாப்ரியா

83. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரிடம் "செவாலியர்" என்ற விருதினைப் பெற்றவர் யார்?

(A) கண்ணதாசன்

(B) வாணிதாசன்

(C) பாரதிதாசன்

(D) சுப்புரத்தினதாசன்

84. வானம்பாடி இயக்கத்தில் ஒருவர்

(A) வல்லிக் கண்ணன்

(B) ந. பிச்சமூர்த்தி

(C) வைரமுத்து

(D) சிற்பி

85. சாலை இளந்திரையனின் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற நூல்

(A) பூத்தது மானுடம்

(B) புரட்சி முழக்கம்

(C) தேன்மழை

(D) எதுவும் இல்லை

Teachingninja.in



Teachingninja.in

86. ‘நரம்பின் மறை’ என்று தொல்காப்பியரால் குறிப்பிடப்படுவது எது?

(A) பண்ணிசை நூல்

(B) இசைக் கருவிகள்

(C) இசை இலக்கண நூல்

(D) பண்கள்

87. பரிதிமாற் கலைஞர் இயற்றிய நாடகவியல் என்னும் நூல் எந்த நடையில் எழுதப்பட்டுள்ளது?

(A) நாடக வடிவம்

(B) செய்யுள் வடிவம்

(C) உரைநடை வடிவம்

(D) கவிதை வடிவம்

88. ஆசிரியரை அவர் எழுதிய சிறுகதையுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | விழிப்பு | 1. | ஜெயகாந்தன் |
| (b) | கரையும் உருவங்கள் | 2. | விந்தன் |
| (c) | ஒரு பிரமுகர் | 3. | சிவசங்கரி |
| (d) | மறுமணம் | 4. | வண்ண நிலவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

89. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் யார்?

(A) ஈஸ்ட்மன்

(B) எடிசன்

(C) எட்வர்டு மைபிரிட்சு

(D) வால்ட் டிஸ்னி



Teachingninja.in

90. ஆசிரியருடன் – நூலைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சுவாமி விபுலானந்தர் | 1. | நாடகத்தமிழ் |
| (b) | மறைமலையடிகள் | 2. | மதங்க சூளாமணி |
| (c) | பம்மல் சம்பந்தனார் | 3. | டம்பாச்சாரி விலாசம் |
| (d) | காசி விசுவநாதன் | 4. | சாகுந்தலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

91. உரைநடைக் காலம் என்பது

(A) பத்தொன்பதாம் நூற்றாண்டு

(B) இருபதாம் நூற்றாண்டு

(C) பதினெட்டாம் நூற்றாண்டு

(D) பதினேழாம் நூற்றாண்டு

92. சரியான விடையைத் தேர்வு செய்க.

நோய்க்கு மருந்து ———————— என்பார் மீனாட்சி சுந்தரனார்

(A) இலக்கணம்

(B) நாவல்கள்

(C) இலக்கியம்

(D) சிறுகதைகள்

93. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்

(A) திரு.வி.க

(B) உ.வே.சா

(C) பாவாணர்

(D) அகத்தியர்



Teachingninja.in

94. வேறுபட்ட இணை எது?

(A) முசிறி – பேரியாறு

(B) வெனிசு – மார்க்கோபோலோ

(C) கொற்கை – தாமிரபரணி

(D) காவிரிப்பூம்பட்டினம் – காவிரியாறு

95. 'ஞானப்பச்சிலை' என வள்ளலார் போற்றும் இலை

(A) கீழாநெல்லி

(B) துளசி

(C) தூதுவளை

(D) குப்பைமேனி

96. இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலையை ஓருங்கள் (நினையுங்கள்) என அறைகூவல் விடுத்தவர் யார்?

(A) தெ. பொ. மீனாட்சி சுந்தரம்

(B) திரு.வி. கலியானசுந்தரம்

(C) மு. வரதராசனார்

(D) பாரதிதாசனார்

97. ஜீவகாருண்ய ஒழுக்கம் எனும் நூலை இயற்றியவர் யார்?

(A) வீரமாமுனிவர்

(B) எச்.ஏ. கிருட்டிணனார்

(C) இராமலிங்கர்

(D) திருமூலர்

Teachingninja.in



Teachingninja.in

98. அம்பேத்கர், "சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தை தோற்றுவித்த இடம்"

(A) சென்னை

(B) திருச்சி

(C) கொல்கத்தா

(D) மும்பை

99. நில மடந்தையும் தம் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவாள் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள் – என எழுதியவர் யார்?

(A) பெரியார்

(B) அறிஞர் அண்ணா

(C) ஜவஹர்லால் நேரு

(D) காந்தியடிகள்

100. "தொண்டு செய்து பழுத்த பழம் தூயதாடி மார்பில் விழும்" – யார் யாரைப் பாடிய வரிகள்?

(A) பாரதியார் – பெரியாரை

(B) பாரதிதாசன் – பெரியாரை

(C) சுரதா – வீரமாமுனிவரை

(D) மு. மேத்தா – திருவள்ளுவரை



Teachingninja.in